பதினைந்தாவது (1889) ஆண்டு முதல் பதிவுசெய்யப்பெற்றது.

பதினைந்தாவது (1889) ஆண்டு முதல் பதிவுசெய்யப்பெற்றது.

DUPLICATE

இந்துசாதனம்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு	ரூ.	5-60
வெளியூர், இந்தியா: ,,	ரூ.	9-40
தொடுவாய்ப்குதி: ,,	ரூ.	9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்	ரூ.	9-40
,, அரைக்கலம்	ரூ.	5-00
,, காற்கலம்	ரூ.	3-15
,, ஒரு அங்குலம்	சதம்	65

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫ } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரி ஆ ஐப்பசிமீ ௧௬௮ (1923 நவம்பர் 1) வியாழக்கிழமை. { இலக்கம்—௩௩.

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்;
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.

(Standard Tiles.)

இவை வேறோக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டுள் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையுங் கொடுக்கத்தக்கனவாயும் எல்லாவிதத்திலும், ஏனையோடுகளினுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மனமேலும் பெருகும், தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

மினுங்கு, கிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பன பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

M. S. MAIDEEN ABDULKADER MARICAR,
& Doctor, T. N. SAMIPILLAI & Co.
MUHIADEEN MEDICAL HALL,
PORTO-NOVO, S. A. Dt.

எனது அன்பர்களே. எனது அன்பர்களே.

சற்று கவனியுங்கள். சற்று கவனியுங்கள்.

இனும்! இனும்!!

இந்த லேகியம்போல் பிற வைத்தியர்கள் செய்து கொடுக்கும் பக்ஷத்தில் ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும்.

சிட்டுக்குருவி வீரதத்துவ லேகியம்.

எனது அன்பர்களே, சிட்டுக்குருவி லேகியமென்று சிலர் செய்து விற்கிறார்கள். அதாவது நரம்புகளுக்குத்தான் கொஞ்சம் வலுவைக்கொடுக்கும். இந்த லேகியம் அப்படியல்ல; எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்; இந்த வீர தத்துவ லேகியத்தினுடைய மகத்துவம் புரித்தயர்களறிவார்கள். இந்த லேகியமானது செய்யும் முறையும் பாகமும் தற்காலம் ஒருவரும் செய்தும் அறிந்துமிரார்கள். அதாவது சித்தர்கள் பெரியோர்கள் பெரிய பெரிய நாதாக்களுடைய செய்யும் முறை சுல்த்தான்கள் ராஜாக்கள் செய்து சாப்பிடும் வீர தத்துவம் தங்கிய லேகியம். தங்கம் குங்குமப்பூ கஸ்தூரி அம்பர் பவளம் முதலிய சேர்க்கைகளைக்கொண்டு சேர்க்கப்பட்டது. இந்த லேகியமானது 1008 நரம்புகளுடைய வியாதிகளையும் சுத்தப்படுத்தி மேகவெட்டை மேகச்சூடு மேகாங்க முதலியவற்றை நீக்கும். எங்கள் கம்பெனி மருந்தை ஒருமுறை தருவித்துச் சாப்பிடும் பக்ஷத்தில் தங்கள் ஆயுள் பரியந்தம் கைவிடமாட்டீர்களென்பது நிச்சயம்.

40 நாள் ஒரு மண்டலம் டப்பி 1-க்கு ரூ. 10—0—0
20 நாள் அரைமண்டலம் டப்பி 1-க்கு ரூ. 6—0—0
V. P. சார்ஜ் பிரத்தியேகம் 0—0—0

லேகியம் சாப்பிடும் முறை லேகியத்துடன் அனுப்பப்படும்.

N. B. வியாதியுள்ளவர்கள் டாக்டர் நேரில் பார்க்கவும். எங்கள் கம்பெனியில் எல்லா விதமான லேகியங்களும் மாத்திரைகளும் தைலங்களும் திராவகங்களும் பஸ்பங்களும் சகாய விலைக்குக் கொடுக்கப்படும்.

சிங்கப்பூர் பினங் மலாய் எஸ்டேட்களுக்கு மருந்துகிரையமும் தபால் செலவுக்காக ரூ. 2ம் முன்னதாக மணியாடர் அல்லது ரிஜிஸ்டர் மூலமாக அனுப்பவேண்டியது. அப்படி அனுப்பாவிட்டால் அனுப்பப்படமாட்டா.

எங்களுடைய கம்பெனிக்கு கமிஷன் ஏஜண்டு தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
விபரம் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளவும்.

(தந்தி விலாசம்—முகையதீன்).

மானேஜர்: எம். எஸ். மெய்தீன் அப்துல்காதிர் மரைக்காயன்,
& டாக்டர் டி. என். சாமிப்பிள்ளை & கோ.,
முகையத்தீன் மெடிக்கல் ஹால்,
பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.
(Y. 20)

எங்கள் சோல் ஏஜண்டு:
P. செல்லையா செட்டியார்,
கொத்தமல்லி ரோட்டு,
நாவல்பட்டி போஸ்ட், சிலோன்.

தீபாவளி நெருங்கிவிட்டது.

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!

விலைசரசம்! உடைநயம்!! அருமையான தினுசு!!!

சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்சானுக்களும், நயம் 120 நெ. 100 நெ. 80 நெ. நூலில் பலகலர் பட்டினாலும் வெள்ளி ஜரிகையினாலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினாலும் ஜரிகையினாலும் பலவிதமான முந்திகள்போட்டதும் முந்தியில் சிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமுந்தியில் ஜரிகையினால் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் நெசவு அழுத்தமாகவும் நோட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம்,
ஜவுளி சேலம்,
Javuli Salem.

கா. கோ. அ. வெ. கு ஒபுளிசெட்டியார் & Co,.
ஜவுளிவியாபாரம் கொகை சேலம்.
(Q. 44)

காகிநாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் லைஸ் நூலினால் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.
(Y. 18.)

சருவஞானோத்தர ஆகமம்.

ஞானபாதம் தமிழ் மூலமும் முத்திரந்த விருத்தியும்.

இது ஸ்ரீகண்டபரமேசுவரரால் ஸ்ரீசுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவசித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0.

தபால் சார்ஜ் வேறு.

ஒரே முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப்பெறும்.

☞ பொ முத்தையபிள்ளை,
சிவாகம சங்கம்,
(H. 20) தேவகோட்டை.

Telegrams: "APPANNA', BANGALORE CITY'

கெ. தி. அப்பண்ணா & கம்பெனி,
பெங்களூர் நகர்,
(இந்தியா).

பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.

		ரூ.அ.பை.
பன்னீர்வத்திகள் சேர் 1-க்கு விலை		0-12-0
	முதல் ரூபா 2-0-0 வரை.	
புனுகுவத்திகள் சேர் 1-க்கு விலை		ரூபா 1-8-0
	முதல் ரூபா 4-0-0 வரை.	
மத்தாப்புவத்திகள் சேர் 1-க்கு விலை		ரூபா 1-8-0
	முதல் ரூபா 3-0-0 வரை.	
ஜவ்வாதுவத்திகள் சேர் 1-க்கு விலை		ரூபா 5-0-0
	முதல் ரூபா 7-0-0 வரை.	
கஸ்தூரிவத்திகள் சேர் 1-க்கு விலை		ரூபா 5-0-0
	முதல் ரூபா 12-0-0 வரை.	
அம்பர்வத்திகள் சேர் 1-க்கு விலை		ரூபா 1-8-0
	முதல் ரூபா 20-0-0 வரை.	
வாசனைலில்லைகள் வில்லை 1-க்கு விலை		ரூ. 0-4-0
	முதல் ரூபா 5-0-0 வரை.	
புனுகு	தோலா 1-க்கு விலை	ரூபா 10-0-0
	முதல் ரூபா 12-0-0 வரை.	
தசாங்கம்	சேர் 1-க்கு விலை	ரூபா 2-0-0
	முதல் ரூபா 3-0-0 வரை.	

கூந்தல் வளருந் தைலம்.

டில் மோஹினி ஹேர் ஆயில் புட்டி 1-க்கு 0-12-0.
டஜன் 1-க்கு 8-0-0.

ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1-க்கு 0-12-0.
டஜன் 1-க்கு 8-0-0.

பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி 1-க்கு 0-12-0.
டஜன் 1-க்கு 8-0-0.

கமலா ஹேர் ஆயில் புட்டி 1-க்கு 0-12-0.
டஜன் 1-க்கு 8-0-0.

ஓட்டோ வாஸனை வெண்டுகள்.

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1-க்கு விலை ரூபா 6-0-0

சந்தன சோப்புகள்.

டஜன் 1-க்கு ... ... ரூபா 6-0-0

சந்தன மரத்தூள்.

பவுண்டு 1-க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City.
(Y. 16) (INDIA).

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

புஷ்டிக்கு கைகண்ட ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ. 4-0-0
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2.

பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வாராது. புட்டிக்கு ரூ 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பன பிள்ளை,
(Q. 41.) வைத்தியசாலை, பழனி. S. I.

இந்துசாதனம்

வாழ்ப்பாணம்:— ருதிரோற்காரி ஆ ஐப்பசி 16உ வியாழக்கிழமை.

கைத்தொழிலபிவிருத்தி.

ஓர் தேசத்தினது ஐசுவரியத்தை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டப்படுஞ் சாதனங்களுள் முக்கியமானவை கல்வி, கிருஷிகம், கைத்தொழில், வர்த்தகம் என்னும் நான்குமாம். இவற்றுள் ஒன்றிலேனும் நமது தேசம் நன்னிலையெய்தாதிருப்பது மிகவும் துக்கத்துக்கிடமான காரியம். இவ்விஷயங்களெவ்வொன்றும் தேசாபிமானிகளின் விசேட சிந்தனைக் குரியதாயினும், கைத்தொழிலே மற்றெவ்விஷயத்தினும் மிக்க கரிசனையாய் இத்தேசத்தின் நன்மையை விரும்பும் யாவரும் தற்போது கவனிக்க வேண்டியதா யிருக்கின்றது. நமது தேசத்தவராற் பாவிக்கப்படும் பொருட்களுட் பெரும்பாலானவை அன்னிய தேசங்களிலிருந்து வருகின்றனவென்பது யாவருமறிந்தவிஷயம். குண்டூசி, ஊசி, நெருப்புக்குச்சு, சவர்க்காரம் முதலிய சிறுவிலைப் பொருட்கள் மூதல் பட்டினங்களிலுள்ள சாய்ப்புக்களில் விலைப்படும் ஏராளமான பெருவிலைப் பொருட்கள் யாவும் ஐரோப்பிய தேசங்களிலிருந்தும் யப்பான் தேசத்திலிருந்தும் இறக்குமதிசெய்யப்படுகின்றன. இப்பொருட்களைப் பாவிக்கும் பழக்கம் இத்தேசத்தவருட் சாமானியமாய்விட்டது. இரவில் வீடுகளில் எரிக்கும் விளக்குக்களுக்கு மண்ணெண்ணெயென் றழைக்கப்படும் அன்னியதேச எண்ணெயே எங்கும் எல்லா வீடுகளிலும் வழங்கப்படுவதாயிற்று. இவ்வகையாய் அன்னியதேசங்களிலிருந்து பெறப்படும் பொருட்களையே இத்தேசத்தவர் எப்பொழுதும் விலைக்கு வாங்கிப் பிரயோகிப்பதினால் நமது தேசத்துப் பணம் எக்காலமும் ஓய்வின்றிப் புறதேசங்களுக்குச் செல்ல, நமது தேசம் வறுமையிலாழ்ந்திருப்பது நூதனமன்று. ஒரு சதம், இரண்டு சதம், ஒரு ரூபா, இரண்டு ரூபா, ஐந்து ரூபா, பத்து ரூபா என்னும் விலையுள்ள பொருட்கள் மூலம் அன்னிய தேசங்களுக்கு எங்கள் பணம் அளவில்லாத வேகத்துடன் செல்வது போதியதன்றென்பதுபோல், ஆயிரவாயிர ரூபாவாய் நமது பணத்தை வாரிச் செல்லும் மோற்றர் இரதங்களும் நங்கு விலைப்படலாயின. நமது தேசத்திற்கு நேரும் இப்பெருந் நட்டங்களை அநுகூலத்துடன் தடுப்பதற்கு இதுகாறும் நமது தேசத்திலுள்ள தேசாபிமானம்பூண்ட பிரபுக்கள் யாதுஞ் செய்யாது வாளாவிருக்கின்றார். இது நமது தேசத்தில் மெய்யான தேசாபிமானிக ளிலரென்பதற்குத் தக்கதோர் சான்றல்லவா?

நமது தேசத்தின் பழைய கைத்தொழில்களை ஊக்கப்படுத்தி நன்னிலைக்குக் கொணர்தலும் நம்மவரான்றியமையாது வேண்டப்படும் பொருட்களை நமது தேசத்திலேயேசெய்தற்குத் தகுந்த கைத்தொழிற் சாலைகளை ஸ்தாபனஞ் செய்து செவ்வனே நடாத்துவதும் நமது தேசப் பிரபுக்கள்மேற் பொறுத்த பெருங்கடமையாகின்றது. இவ்விஷயத்திற் சிங்களநாடுகளிலுள்ளோர் தம்மாலியன்ற முயற்சி செய்து முன்னேறிவர, நம்மவர் யாதும் முயற்சியின்றி யிருத்தல் மிகவுந் துக்கத்துக் கிடமான தொன்று. நமது தேசம் மேற்கூறியவாறு கைத்தொழிற் பொருட்களுக்குப் புறதேசங்கள்மீது தங்கியிருக்கும்வரைக்கும் அதனடிமைத்தனம் நீங்காதென்பதையும், சுயராச்சியத்தைப் பெறுவதற்குக் கைத்தொழிலபிவிருத்தி மிக்க காத்திரமான வேதுக்களி லொன்றென்பதையும் நமது சனத்தலைவர் நன்றாய்ச் சிந்தித்து மெய்யுணர் வடையவேண்டுமென்று நாம் வாஞ்சிக்கின்றோம். பாரிய கைத்தொழின் முயற்சிகள் பூரணவனுகூலம் பெறுதற்குச் சமுதாயங்கள் மூலமாக நடாத்தப் பெறுவதே தகுதி. ஆதலின், இந்த நன்னோக்கத்துடன் சமுதாயங்களைக் கிரமமாயேற்படுத்தி அவற்றால் கைத்தொழில்களைத் தக்கவாறு அபிவிருத்தி செய்வது இத்தேசத்தின் சனத் தலைவர்களுடைய விசேட கடமை. அவ்விதசமுதாயங்களை ஸ்தாபிப்பதினாற் கைத்தொழி லபிவிருத்தியாவதுமன்றி, தற்காலம் கல்விகற்று உத்தியோகமில்லாது முட்டுறும் வாலிபரு ளநேகரும் கூலிவேலை செய்யும் சனங்களும் வேலைபெறுவதற்கு நல்ல வழியுமாகும். கல்விவிஷயத்திலும் கிருஷிவிஷயத்திலும் அரசியல் விஷயத்திலும் சிறிதாவது முயற்சிபுரியும் நமதுதேசச் சனத்தலைவர்கள் நமது தேசத்திற்கு அளப்பரும் பெரும் நன்மைபயக்கக்கூடிய கைத்தொழிலபிவிருத்திவிஷயத்தில் செயலற்றோராயிராது, இனியாவது தங்கள் கடமையையுணர்ந்து தகுந்த முயற்சி புரிவார்களென்று காத்திருக்கின்றோம்.

சைவப் பாடசாலைகள்.

எமது சனசங்கத் தலைவர்களில் ஒருவர் கூறியவாறு யாழ்ப்பாணத்திலே சைவசமயம் வீட்டுப் பெண்கள்மாட்டே தங்கி நிற்கின்றது. நாயகனையாகுதல் பிள்ளைகளையாகுதல் கோயிலுக்குப் போகவும் சுவாமி தரிசனஞ் செய்யவும் விரதம் அனுஷ்டிக்கவும் ஏவுந் தூண்டுகோல்கள் வீட்டுப் பெண்களே. ஆகவே பெண்களில்லையெனிற் சைவசமயமு மில்லையென்று சொல்லக்கூடிய நிலைபரம் வந்துவிட்டது. நாயகனையுந் தனது பிள்ளைகளையும் மேற்கூறியவாறு சைவநன்னெறியி லுய்க்கும் பெண்மணிகள் கல்விகற்கும் பாடசாலைகளின் நிலைபாத்தைச் சற்று ஊன்றி ஆலோசித்தல் நன்று.

சைவப் பாடசாலைகள் எல்லாக் கிராமங்களிலுமில்லை. இருக்கின்ற சில பாடசாலைகளும் மிஷன்பாடசாலைகளின் எதிர் (Rival) பாடசாலைகளாம். இவைகளின் வளர்ச்சியைப் பார்த்தால், இவைகளிற் பெரும்பாலானவை ஒன்று வைத்து இரண்டு வருஷத்தின்பின் பக்கத்திலே கூட வைக்கப்பட்ட இன்னொரு தென்னம்பிள்ளையின் கேவல நிலையை ஒத்திருக்கின்றன. கட்டிடம், தளபாடம், உபாத்திமார் தராதலம் என்ற தொடக்கத்துப் பாடசாலை உபகரணங்களெல்லாவற்றிலும் இவைகள் குறைபாடுடையனவே. இவைகளின் சொந்தக்காரர், முதலாளிகள் என்றெல்லாம் இப்பாடசாலைகளை நன்னிலைபாத்துக்குக் கொண்டுவருதற்குப் போதிய பொருள் வருவாயைக் காணாது தியங்குகின்றனர். உபாத்திமாரின் வேதனத்துக்கே திண்டாட்டம் போடும்போது, கட்டிடம் தளபாடம் முதலிய உபகரணங்களைப்பற்றிப் பேசுவதேன்? அரசினர் கொடுக்கும் உதவிநன்கொடைப் பணத்தைக்கொண்டு வெள்ளெலியின் சீவியத்தையொத்த சீவியம் (Hand to mouth existence) நடத்துகின்றனர். இவ்விதம் தெரிகெட்டு நிற்கும் பாடசாலைகள், எங்கள் சாதிக்கும் சமயத்திற்கும் செய்யும் பேருதவியை உணருமாற்றலிலராய், நாம் எத்தனைநாட் காலங்கழிப்பது, நாம் முன்னேறவேண்டின் இதுவிஷயத்தில் கண்ணுங் கருத்துமாக விருக்கவேண்டும். நமது சிங்களச் சகோதரர்கள் இதுவிஷயத்திற் செய்துவைத்திருக்கும் ஒழுங்கு நாம் எல்லாராலுங் கவனிக்கற்பாலது. ஊர் தொறும் பரவியிருக்கும் புத்த பாடசாலைகளெல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்து "தியசவிக்கல் சொசைற்றி" (Theosophical Society) என்னும் ஓர் மகாசபைக் கீழ் வைத்து அவைகளைச் செவ்வனே நடத்தி வருகின்றனர். சமயாபிமானம் சாதியபிமானம் இரண்டுமுள்ள பிரபல சிங்களப் பிரபுக்கள் பலர் அச்சபையின் கௌரவ (வேதனமில்லாத) உத்தியோகத்தராயும் அங்கத்தவராயுமிருந்து அதிகம் உழைக்கின்றனர். இவ்விதமான ஓர் சபை ஸ்தாபித்து ஆங்காங்கு நட்டுக்கெட்டுக் கிடக்கும் சைவப் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு எம்மூர்ப் பிரபுக்கள் முன்வருவார்களானால் அவைகள் நன்னிலைபாத்துக்கு வரும் எனபதிற் சந்தேகமில்லை. இது விஷயத்தில் இப்போதுள்ள பாடசாலைகளின் சொந்தக்காரரும் முகாமைக்காரரும் சிரத்தை எடுத்து உதவிபுரிவார்களானால் இக்காரியம் அனுகூலப்படும். அரசாட்சியாரின் உதவியைப் பெறுவதற்காயினும், ஊரவர்களின் சகாயத்தைப் பெறுவதற்காயினும் இப்பாடசாலைகள் தனியே யிருப்பதிலும் ஒருங்கு சேர்ந்து ஓர் சபையின்கீழ் இருப்பது மிகவும் விரும்பப்படத்தக்கது.

அபிமானம்

ஆன்மா சித்தும் சரீரம் சடமுமாகிய வெவ்வேறு சாதிகளாயிருந்தும் அவ்வான்மா சரீரத்தோடு சம்பந்தப்பட்டுத் தானென்றபிமானித்து அச்சரீரம் ஸ்நாநம் போசனம் வஸ்திரம் ஆபரணம் சந்தனம் புஷ்பம் வனிதாதி போகங்கள் ஆகிய இவைகளைப் பெறுங்கால் மகிழ்ச்சியும், அழுக்குப் பசி தாகம் நோய் விஷம் முதலியவைகளைப் பெறுங்கால் துக்கமும், இச்சரீரசுகத்திற்கு வேண்டியவைகளுக்குபகாரமாகுந் திரவிய முதலியவற்றைச் சம்பாதித்து அவற்றிற்கு வளர்ச்சிவருங்கால் மகிழ்ச்சியும், குறைவுவருங்கால் துக்கமு மடைகின்றது. இவை அவ்வான்மா சரீரத்தைத் தானென்றுந் திரவிய முதலியவற்றைத் தன்னுடையதென்றுங் கொண்ட தேகாபிமான திரவியாபிமானங்களால் விளைந்தனவேயாம்.

இதுபோலவே யாவரும் தாம் தாம் சனித்த தேசத்திலும் சாதியிலும் அனுட்டிக்குஞ் சமயத்திலும் வைக்கும் அபிமானத்தால் எம்முடைய தேசம் எம்முடைய சாதி எம்முடைய சமயம் என்று மனமுறைத்து இந்த மூன்றிற்கும் பெருமை வருங்கால் மகிழ்ச்சியும் சிறுமை வருங்கால் துக்கமு மடைகின்றார்கள்.

தேசத்தாலும் சாதியாலும் சமயத்தாலும் இவர் இன்ன தேசத்தார், இவர் இன்ன சாதியார், இவர் இன்ன சமயத்தார் என்று கொள்ளப்பட்டு இதனாற் சமத்துவமுடையர்களா யிருக்கும் மானுடர்கள் இம்மூன்றேதுவினாலும் ஒற்றுமையுடையராய் ஒருவர் மற்றவர்க்கு வந்ததைத் தமக்கு வந்ததென்றே கொள்ளுதல் எல்லாத் தேசத்தார்க்கும் எல்லாச் சாதியார்க்கும் எல்லாச் சமயத்தார்க்கும் ஒத்த செயலேயாம். இது ஒவ்வோர் காலத்துப் பற்பல தேசத்தாரும் சாதியாருஞ் சமயத்தாருந் தாந் தாங் கொண்ட தேசாபிமானம் முதலியன காரணமாகத் தத்தம் பொருளையும் உடலையும் பொருட்படுத்தாது நடத்திய பற்பல யுத்தங்களால் அறியக் கிடக்கின்றது.

ஆகவே ஒருவர் தானென் றபிமானிக்கும் சரீரத்திலும் தன்னுடையதென் றபிமானிக்குந் திரவிய முதலியவற்றிலும் வைக்கு மபிமானத்தைப் பாராகிலும் தேசம் சாதி சமயம் என்பவற்றில் வைக்கும் அபிமானம் விசேடித்ததேயாம்

இவற்றுள்ளும் தேசாபிமானம் பிறந்த இட உரிமையால் தேசத்துப் பிறந்தோர் எல்லோரையுங் கருதிப் பொதுமையினிற்றலாலும் சாதி அபிமானம் அவரினு முரிமை பூண்ட சாதியார் எல்லாரையுங் கருதிச் சிறப்பினிற்றலாலும் தேசாபிமானத்திலும் சாதியபிமானம் விசேடமுடையது. சாதி அபிமானம் மானுடர்க்கே அன்றிக் குரங்கு மாடு ஆடு யானை காகம் கிளி முதலிய மிருகபக்ஷிகளுக்கு மிருத்தல் பிரத்தியக்ஷத்தில் காணப்படுகின்றது.

எல்லா ஆன்மாக்களும் மாணத்திற்குப் பயமும் உயிர்வாழ்தலில் விருப்பும் உடற்பாதுகாப்பிலும், அதற்குவேண்டிய உணவுப்பொருண் முதலியன தேடுதலிலும் காத்தலிலும் மிகு முயற்சியும் கவனமுமுடையவைகளாயிருக்கின்றன. ஆதலால் யாவராலும் உயிர்போல நேசித்துப் பாதுகாக்கப்படும் பொருள் பிறிதில்லை. இவ்வியல்பினதாகிய உயிரினும்பார்க்க விசேடமாகக் காக்கப்படும் பொருள் மானுடர்க்கிருக்கின்றது அது, நாணுடைமை. அது "நாணு லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா ணுண்டுறவார் நாணுள்பவர்" என்பதனாற் கொள்ளப்படும், இயல்பினையுடைய நாணமுடைமையும் மானமும் ஒருவருடைய குலந் தாழ்வடைய வருங்கால் நீங்கவரு மாதலால் யாவருந் தங் குடிப்பிறப்பினுள்ளார்க்கு வந்த குறைவை அவமானத்தைத் தமக்கு வந்ததாகவே கொண்டு அதை நீக்குதற்குத் தக்க முயற்சி செய்தல்வேண்டும்.

இதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் "குடிசெயல்வகை" என்றொரு அதிகாரங் கூறி அதிலே குடியையுயர்த்துதற்கான கருவியையும், அது செய்வார்க்குத் தெய்வந்துணைநிற்றலையும், அச்செயலுடையார் சிறப்பையும், அவர் மானம்பார்த்தல் காலம்பார்த்தல்கூடாமையையும், அவ்வியல்பினரில்லாத குடிகெடுதலையும் எடுத்துக் கூறினார். இவ்வாறு குடியை யுயர்த்துதல்வேண்டு மென்பதை அவர் எடுத்துச் சொல்லவே தன்சாதியை யுயர்த்துதல்வேண்டு மென்பது சொல்லாதே யமைந்தது.

சமாசாரம்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி:—இக்கல்லூரியின் பரிசளிப்புக் தொண்டாட்டம் வருகிற சனிக்கிழமை 3—11—23 பின்பகல் நாலுமணிவரையில் இக்கல்லூரிமண்டபத்தில் நடைபெறும் அப்பொழுது வித்தியாதிகாரி கௌரவமிகு L. மக்கறே அவர்களே சபைத்தலைவராக இருந்து பரிசளிப்பர்,

தற்கொலை செய்தாள்:—சிவியாதெருவில் ஒரு பறையன் ஒரு பெண்ணுடன் சண்டையிட்டு அவருடைய தாலியைப்பிடுங்க அவள் பக்கத்தார் இவனுக்கு விருந்து எடுக்கும்படி பொலிஸ் தானத்திற்குப் போவதற் கிடையில் இவன் இணற்றுள் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டான்.

ஒரு சிசுகாதகி கொலைத் தண்டனை விதிக்கப்பெற்றமை:—களுத்துறையைச் சேர்ந்த மத்துகாமா என்னுமிடத்தில் ஒரு தோட்டத்தில் வேலைசெய்த கறுப்பாயி என்னும் கூலிப்பெண் தான் சோரமாகப் பெற்ற ஆறுநாட் குழந்தையின் வாயில் கெல்லிட்டு அதனைக் கொன்ற குற்றத்துக்காகக் கொழும்புச் சுப்பிறீங்கோட்டில் விளங்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப் பட்டாள்.

பெரும் மோட்டர்ரத விபத்து:—பானந்துறையில் சென்ற வியாழக்கிழமை இரு மோட்டர் வண்டிகள் ஒன்றையொன்று விலத்த முயன்ற விடத்தில் ஒன்றோடொன்று முட்டினமையினால் ரதத்திலிருவர் இறந்தனர். இருவர் பெருங்காயமடைந்தனர்.

நேயர்கள் ஊகித்தறிக:—இங்கிலாந்திலுள்ள ஒருகிராமத்தில் ஒருவர் தமது 68-ம் பிராயத்தில் 22 வயதுள்ள ஒரு பெண்ணை இரண்டாவதாக விவாகஞ்செய்துகொண்டார். இவரது மூத்தமனைவியின் 40 வயதுள்ள புதல்வர் தமது தந்தையார் விவாகஞ் செய்த பெண்ணின் தாயாரை மணந்துகொண்டார். தகப்பனுருக்கும் மகனுக்கும் தாய்க்கும் மகளுக்கும் என்ன முறை என்பதை நேயர்கள் ஊகித்தறிக:

கடிபடைகளுக்கொரு மருந்து:—நாடிங்ஹாம் சர்வகலாசாலையில் ஷெப்பீல்டைச் சேர்ந்த டாக்டர் ஈ. எப். ஸ்கின்னர் உபயோகிக்கும் பொழுது தாம் புதிதாகக் கடி படைகளுக்கு ஒரு சுலபமான மருந்து கண்டுபிடித்திருப்பதாகக் கூறினார். அம்மருந்து புகையிலைத் தூளையும் மையையும் கலந்து தடவுவதுதான். கடிபடைகளுக்கு அம்மருந்தை இரண்டு மூன்று தடவை தடவுவதினால் அவைகள் சுலபமாக நீங்கிவிடுகின்றனவாம்.

பேசும் பயாஸ்கோப் படங்கள்:—பல்லிவிக் பேசும் பயாஸ்கோப் படங்கள் மூன்று ஆங்கில சாஸ்திரிகளால் இப்பொழுது தயார் செய்யப்பட்டு வருகின்றன. அவர்கள் ஆட்டர்களை நடிக்கவிட்டுப் படம் எடுக்கும்பொழுது, அவர்கள் பேசும் வார்த்தைகளை எடுப்பதற்கும் புதிதாக ஒரு யந்திரத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். படங்கள் இன்னும் நன்றாகச்செய்து முடிக்கப்படவில்லை. ஆயினும் அது சரியாக முடிந்து விடும் என்று நம்பப்படுகின்றது.

மாஜி பிரிடிஷ் பிரதம மந்திரி காலஞ்சென்றார்.—கனம் போனர்லா ஒருவகை நிமோனியா ஜுரத்தால் பீடிக்கப்பெற்று லண்டனில்சென்ற மாசம் 30உ அதிகாலை உயிர்துறந்தனர். இவர் லாயிட்ஜார்ஜுக்குப்பால் சிறிதுகாலம் பிரிடிஷ் பிரதம மந்திரியாயிருந்தும் தேக அசௌக்கியத்தின் காரணம் வேலையை விட்டவர்.

திருக்கோணமலைச் சைவப்பெண்பாடசாலை ஆரம்பம்.

கடந்த இந்துசாதனப் பிரசுரங்களொன்றில் "சிவநேயன்" என்பார் பொது நலங்கருதி இந்நகர்ச்சைவாபிமானிகட்கு விண்ணப்பஞ் செய்தவாறு, சைவாபிமானியுந், தருமசீலருந், தனவந்தருமாய் விளங்கி, காலஞ்சென்ற ஸ்ரீ மாந் சிற்றம்பலம் சண்முகம்பிள்ளையின் பரியாராகிய ஸ்ரீ மதி தங்கம்மாள் அவர்களால், ஐந்தாம் நெம்பரில், ஓர் ஆசனம் வாங்கப்பெற்று நிகழும் ஐப்பசி மாதம் இரண்டாந் திகதி, வியாழக்கிழமை இரவு ஐந்தாழிகைபோல் வந்த சுபமுகூர்த்தத்தில், அஸ்தி பாரமிடப்பெற்று, ஒன்பதாந் தேதி வியாழக்கிழமை காலமே விருச்சிக லக்கின சுபவேளையில், தற்பொழுது அமைக்கப்பெற்ற ஓலை மண்டபத்தில், பல பிரபுக்கள் சமுகத்தில், ஸ்ரீ மாந் எஸ். வைத்திலிங்கம்பிள்ளை பீ. ர. ஸீசில்குர் அவர்களால் சைவப் பெண்பாடசாலை இனிது ஆரம்பிக்கப்பெற்றது. அத்தருணம் ஒன்பதுபிள்ளைகள் சேர்ந்தார்கள். இப்பாடசாலை இக்கரில் சைவர்களாயுள்ளோர்க்கிருந்த பெருங்குறையை நீக்குவதாயிற்று. இதனை நினைந்து சைவசமயத்தோர் எல்லோரும் பெருமகிழ்ச்சி யடைவதுடன் தங்கள் பிள்ளைகளை, இவிப் பிரமதவித்தியாசாலைக்கனுப்பாது, இங்கே அனுப்பி, ஸ்ரீ மதி தங்கம்மாள் தொடங்கிய, நன் முயற்சியை ஊக்கப்படுத்தி, பாடசாலைகளொருவணங்கும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து சிறப்புறும்படி செய்வார்களாக, சுபமஸ்து.

கடிதன்,

சிங்களர் தமிழர் ஐக்கியம்.

நாம் எமது சரித்திரங்களை ஆழமாய் ஆராய்ந்து பார்க்குமிடத்து எம் முன்னோர் அரசியல் பொருளீட்டல், சனசமுதாயக் கொண்டாட்டம் முதலிய இத்துறைகளில் செய்துவந்த எக்கருமங்களும் எமது சமய கோட்பாடுகளுக்கிணங்கவே நடந்தேறினவென வறிகிறோம். ஆனால் இக்காலத்திலோ அரசியல் விஷயங்களும் மற்றும் பொது முயற்சிகளும் சமய ஆதரவின்கீழ் நடைபெறுகிறதில்லை. எங்கே பார்த்தாலும் ஒரு தேசத்தின் நன்மை, தீமை, செல்வம் செல்வாக்கு, ஆகிய இவை, அங்கே சனத்தலைவரென்றிருப் போரின் சுயநயத்திற்கும் பேராவிற்குமே பலியாகின்றன. எமது சாதியத் தேர்ச்சிக்கு அத்தியாவசிய அம்சமாகிய ஐக்கியம் மனிதராலாக்கப்பட்ட உடன்பாடுகளிலும் பொருத்தங்களிலுமே தங்கியிருக்கின்றது. ஆதலால் சிங்களருக்குந் தமிழருக்கும் சனசமுதாய விஷயங்களிலும் அரசியல் விஷயங்களிலும் நெடுங்கால ஒற்றுமை ஏற்படவேண்டுமாயின் எல்லா உயிர்த் தோற்றங்களிலும்ஒரே ஜீவன்(இறைவன்) தான் நிறைந்திருக்கிறதென்னும் உண்மையை யுணர்ந்து ஆன்ம சம்பந்தமான ஓர் ஐக்கியத்தைத் தேடவேண்டும்.

பல சாதியாரையும் பல வகுப்பாரையும் ஒற்றுமைப் படுத்துவது அவர்கள் தேசத்தின் இயற்கை அமைப்பும், பொதுச்சரித்திரமும், பொதுச்சீர்திருத்தமும், பொது நன்மை தீமைகளுமே.

இலங்கையின் இயற்கைஅமைப்பைநோக்குங்கால் சிங்களர்மாத்திரம் அல்லது தமிழர் மாத்திரம் ஒருபெருஞ்சாதியாராகமாட்டார். ஏனெனில் தமிழர் இலங்கையின் பலபாகங்களிலும் அங்கு மிங்குமாய்ச் செறிந்திருக்கிறார்கள். மேலும் இலங்கையை வடக்குத் தெற்காகப் பிரிப்பதற்கு இயற்கை அமைப்பில் ஆறு, மலைத்தொடர் முதலிய தடைகளில்லை. ஒரேதேசத்தில் உண்மையான வேறுவேறு பலசாதியார் உடன் வீக்கமாட்டாரென்பதைச் சரித்திரங்களறிகிறோம். எப்படியெனில் இங்கிலாந்தில் வசித்த கெல்ற்றியர் (Celts) சாக்ஸனியர் (Saxons) டேனியர் (Danes) நோர்மனியர் (Normans) எனப்பட்ட இப்பல சாதியாரும் ஒன்றுபடும் வரையில் இங்கிலாந்தில் உண்மையானசாதியம் இருந்ததில்லை. இத்தாலியிலும் ஜோமனியிலும் நடந்த சமீப சம்பவங்களிலிருந்தும் மேற்படி உண்மை தெளிவாகின்றது.

"சிங்களரும் தமிழரும் என்றென்றைக்கும் சண்டையிட்டுக் கொண்டேயிருந்தார்கள். அவர்களுக்குப் பொதுவான ஒரு சரித்திரமுண்டா?" என்பர் சிலர். ஆனால் சிங்களருக்குந் தமிழருக்குமிடையில் நடந்த யுத்தங்கள் ரஸ்கனியருக்கும் (Tuscans) ரீயோப்பொலிற்றனியருக்கும் (Neopolitans) அல்லது ஹனவீரியருக்கும் (Hanoverians) பிறஷியருக்குமிடையில் (Prussians) நடந்த யுத்தங்களிலும் மோசமானவையா? ஒரு பெருஞ்சாதி(Nation) தோற்றுவதற்குப் பல சிறு சாதியர் (Peoples) யுத்தமென்னுங் கம்மாலையில் உருக்கப்பட்டுப் போர்க்களமெனும் பட்டடையில் அடிக்கப்படுகிறார்களென்றும், இவ்வித கருமங்களே சாதியத்தைப் பிறப் பிக்கின்றதென்றும், இந்தச்சாதிய எண்ணம் (Idea of nation) பரவ அந்தச் சிறுசாதியார் ஒவ்வொருவர்பக்கத்திலும் மிகழ்ந்த வீரச்செயல்கள் பின்தோன்றும் அத்தனிப் பெருஞ்சாதியாரின் பொதுப் பெருமைக்குக் காரணமாகிறதென்றும் அனிபெசன்ற் அம்மையார் சொல்லுகிறார். ஆகவே தமிழர் எல்லாரும் துட்டகெமுனுவையிட்டும் பராக்கிரமபாகுவையிட்டும் சிங்களர் எல்லாரும் ஏளாளனை (ஏலேலன்) யிட்டும் பெருமை பாராட்டவேண்டும். சிங்களர் தொகை இலங்கைக் குடிசன முழுத்தொகையில் முக்காற்பங்காயிருக்கிற படியால் சிங்களர் தாமே உண்மையான இலங்கைவாசிகளென்றும் தேச ஆட்சிக்குரிய கூடிய உரித்துத் தமக்கேயுள்ளதென்றும் ஒருவேளை சொல்லக்கூடும். ஆனால் சரித்திர நீதிப்படி அது அப்படியல்ல. நோர்மனியர் சாக்ஸனியரை வென்றார்கள். ஆனால் எண்ணூறு வருஷங்களின்பின் "சாக்ஸனியரும் நோர்மனியரும் டேனியரும் நாம்" என்று ரெனிசன் (Tennyson) புலவர் பாடுகிறார்,

எமக்குச் சமீபமாயுள்ள ஓர் உதாரணத்தை எடுத்துப் பார்ப்போம். இந்தியசரித்திரத்தைப் பெரிதாக்குவதற்குக்காரணராயுள்ள மகமதியர் தாம் மோகலியர், ஆபுகானிஸ்தர், துருக்கியரென்ற பேதமின்றி இந்துக்களைப் (Hindus) போலத் தாமும் இந்தியாவைத் தமது தாய்த் தேசமென்று உரிந்தாடித் தம்மையும் இந்தியராக மதித்து நடக்கிறார்கள். தற்சமயம் இந்தியர் எவரும் அவர்கள் உரித்தைமறுக்க மாட்டார்.

சிங்களருக்குந் தமிழருக்கும் பொதுவான ஓர் சீர்திருத்தமுண்டு. ஸ்ரீ ஆநந்தக்குமாரஸ்வாமி அவர்கள் சொல்லுகிறதாவது:"இலங்கை பாளி இலக்கியத்திற்கும் தக்ஷண பௌத்த மதத்திற்கும் ஒப்பற்ற ஓர் களஞ்சியம். அது தன்னகத்தே சிதைவில்லாத தொடர்பான சரித்திரங்களை யமையப்பெற்றிருப்பதால் இந்திய சரித்திரங்களில் நிச்சயிக்கக்கூடாத சில காலங்களை (மனம் போகிறவண்ணம்) நிச்சயிக்க ஒரு பெருந் தடையாயிருக்கிறது. சிங்களருடைய சில்ப, சித்திர சாஸ்திரங்களையும், சமயத்தையும், சாதியக் கட்டையும் உற்றுநோக்குமிடத்துப் பழைய இந்துக்களின் (Hindus) சீர்திருத்தங்களின் சில அம்சங்கள் கண்முன் தோற்றினாற்போற் புலப்படுகின்றன. இந்தவிதமாக இந்தியாவில் எப்பகுதியிலும் காணமுடியாது. இராமபிரானதும் சீதாபிராட்டியினதும் காதல் சம்பவங்களை விபரிக்கும் இந்தியரின் சிறந்த இதிகாசம் இந்தியரொவ்வொருவரின் மனதிலும் இந்தியாவையும் இலங்கையையும் ஒன்றுபடுத்துகிறது." இந்தியன் அல்லது இந்து என்ற சொல்லுக்குப் பதிலாகத் தமிழன் என்ற சொல்லைப் பாவித்துவிட்டால் சிங்களரினதும் தமிழரினதும் சீர்திருத்தத்தின் ஒற்றுமை தெள்ளிதில் விளங்கும். சிங்கள அரசர் காலத்தில் சிங்கள வாலிபன் ஒருவன் படித்துச் சீர்திருந்தினவன் என்றபட்டத்தைப் பெறுவதற்குத் தமிழையும் படித்து முடிக்க வேண்டியவனாயிருந்தான். முன்போலத் தற்காலத்திலும் சிங்களர் தமிழையும் தமிழர் சிங்களத்தையும் படித்து இரண்டு சாதியாரையும் பிரிக்கும் இந்தப் பாஷை இடையூற்றை நீக்குவதே நலம்.

சிங்களருந் தமிழரும் அரசியல் விஷயங்களிலும், சனசமுதாய விஷயங்களிலும், பொருளீட்டலிலும் பொது விருப்பமுடையவர்களாயிருக்கிறார்கள். ஏனெனில் இவைகள் ஒருசாதியாரின் அல்லது ஒரு வகுப்பாரின் விசேஷ உருமைப்பொருள்களல்ல. ஆனால் அவை எல்லா இலங்கை வாசிகளுக்கும் பொதுவான பரவணியாஸ்தி.

சமயமும் பாஷையும், இரண்டு சாதியாரையும் ஒற்றுமைப்படுத்தக்கூடாத அவ்வளவு வித்தியாசமுடையனவெனலாம். சுவிற்சர்லாந்தில் மூன்று வித்தியாசமான பாஷைகளும் அயர்லாந்தில்இரண்டு வித்தியாசமான பாஷைகளும் பேசப்படுகின்றன. எனினும் அவர்கள் ஒருமித்தவேறுசாதியாராகவே ஒழுகுகிறார்கள். 47 பிரதானமான பாஷைகளுக்கு உறைவிடமான இந்தியாவும் இந்து பிரித்தானிய பிரஜாபிபத்திய நாடுகளிலொன்றாகி ஒரு தனிச் சாதியத்தையே தேடுகிற பக்குவத்திலிருக்கின்றது. மேரி ராணி புருெட்டெஸ்ருன்று கிறிஸ்தவர்களையும் எலிஸபெத் ராணியும் குறொம்வெலதிபரும் (Cromwell) ரோமான் கதவோலிக்கரையும் வதைத்தனர். ஆனால் இன்றைக்கோ கத்தோலிக்கரும், வெஸ்லியன், அங்கிலிக்கன் கிறிஸ்தவர்களும் ஒரு பெருஞ்சாதியாரின் அங்கத்தவர்களாக ஒழுகுகிறார்கள். 'நான் ஒரு இந்தியன்' எனவே இந்துக்களும் மகமதியரும் பெருமை பாராட்டிக் கூவுகின்றனர். நிற வித்தியாசத்தால் அமெரிக்காவிலுள்ள கறுத்தவர்கள் ஏனைய சாதியாரிலிருந்தும் வேறாக எண்ணப்படுகிறார்கள். என்றாலும் அவர்களும் அமரிக்க சாதியாரின் ஒரு அங்கமே அங்கம். ஒரு பெருஞ்சாதி(Nation) உண்டாவதற்குப்பாஷை வர்க்கம், சமயம், நெடுங்காலமாக அநுட்டிக்கப்பட்டுவந்த சாதிக்கட்டுப்பாடு, இனப்பிரிவு முதலிய இவை யாவும் இடர்களாகமாட்டாவென்பதை மனிதர் அநுபவத்திலேயே கற்றுக் கொள்ளுகிறார்கள்.

எங்களுடைய தசைகளைத் திரட்டித் தேகத்தைப் பெலப்படுத்துகிறதற்கு டம்பெல்ஸ் (Dumb-bells) எனப்படும் இயந்திர தேகாப்பியாசக் தேவையாயிருப்பது போல இலங்கையிலிருக்கும் இந்த இரண்டு சாதியாரையும் ஒன்றுகத்திரட்டி ஒற்றுமைப்படுத்துவதற்குச் சிறு சண்டைகளும் வித்தியாசங்களும் அத்தியாவசியந் தேவையாயிருக்கின்றன. ஆதலால் நாம் அநுகூலமடைவதை யிட்டு அவநம்பிக்கை கொள்ள வேண்டாம்.

சிங்களரும் தமிழருமாயுள்ள நாம் எமக்கிடையிலிருக்கும் பகை, பொறாமை, வெறுப்பு பிரிவினை முதலியவற்றை மறந்து, உலக சீர்திருத்தத்திற்கும் உலகவிருத்திக்கும் நாமும் எமதுபங்கை உபகரிக்கக்கூடிய சலாக்கியத்தை அநுபவிக்கிற இலங்கை வாசிகளென்ற பெரிய சாதியாராவதற்கு, கஷடங்களிருந்த போதிலுங் கலங்கியாது, ஒருவரோடொருவர் அளவளாவித் தோழராய் நடப்போமாக. தியாகம், தொண்டு, இணக்கம், இரக்கம், ஆகிய இவையே இலங்கைச் சாதியாரின் மகுடத்தில் சாதிவித்தியாசங்களால் நா நா திசைகளிலுமுண்டாகும் அந்தகாரத்தை தமதுஒளியினாலும் கார்தியினாலும் அகற்றக் கூடிய அவ்வளவு பிரபை வாய்ந்த செழுமணிகளாக விருக்கவேண்டும்.

இந்திய சமாசாரம்.

மௌலானா சௌகத்தலி விடுதலையடைந்தமை.

மௌலானாமுகமத் அலியின் தமையனாராகிய மௌலானா சௌகத் அலி சிறைவிதிக்கப்பட்ட காலம் முடிந்துவிட்டமையால் விடுதலை செய்யப்பட்டார் என அறிகின்றோம்

ஸ்ரீமதி. சரோஜனி தேவி.

இவர் ஸோலனில் சுரத்தினால் பீடிக்கப்பட்டு படுக்கையிலிருந்துவருகிறார். அவரது சுரம் குறையாமலிருக்கின்றது. அவரது தேக நிலை இன்னும் ஒருவாரத்துக்குள் சற்று குணமடையும் என்று நம்பப்படுகின்றது. அவர் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் பம்பாய்க்குத் திரும்பி விடுவாரென்று தெரிகிறது.

சித்திர மெழுதுவதில் இந்தியர்க்குள்ள திறமை.

இந்தியச் சங்கத்தாரால் கூட்டப்பட்ட கூட்டத்தில் தலைமை வகித்த லார்டு ரொனல்டுஷே அக்கூட்டத்தில் பேசுகையில், சித்திரம் வரைவதில் இந்தியர்களுக்குள்ள திறமையையும், அவர்கள் வரையும் சித்திரங்களின் மேன்மையையும், இங்கிலாந்து தேசத்தார் சமீபத்தில் தான் அறியலானாரெனறு கூறினார்.

மௌலானா ஷவ்கத் அலி பேட்டி கண்டு பேசப்பட்டார்.

"ஹிந்து" பத்திரிகையின் நிருபர்மௌலானா ஷவ்கத் அலியை ஆமதாபாத் ரயில்வே ஸ்டேஷனில் பேட்டி கண்டு பேசிய பொழுது அவர் கூறியதாவது:— ஆண்டவன் எனக்கு ஒரு பெரிய சகோதரரை அளித்திருக்கின்றார். அவரே மஹாத்மாஜி. எனது இளைய சகோதரர் மௌலானா முஹம்மதலியும் இருக்கிறார். எனது சிறிய தேசத்தொண்டைப் பல ஜாதியாரும் தேசத்தில் போற்றுகின்றனர். என்னிடத்தில் எல்லா ஜாதியர்களும் மிகவும் அன்பாய் இருக்கிறார்கள். எர்வாடா சிறையிலுள்ள எனது தலைவருக்கு நான் செய்த வேலைகளைப் பற்றிக் கூற வேட்டியவனாக இருக்கிறேன்.

சிறைச்சாலையில் வேலைசெய்ய மறுத்தது வாஸ்தவமா என்று கேட்கப்பட்டபோது அவர் கூறியதாவது:—

நான் வேலைசெய்ய மறுக்கவேயில்லை. நான் மே மாதம் 1-ந் தேதியிலிருந்து மார்ச்சுமாதக் கடைசிவரையில் சிறையில் வேலைசெய்து வந்தேன். அதிகாரிகள் சிறையில் ராஜீயக் கைதிகளை நிர்வாணமாக நிறுத்தி சோதனைசெய்வதைக் கண்டிப்பதற்கறிகுறியாகவே நான் வேலைசெய்ய மறுத்தேன். அதிகாரிகள் மற்றவர்களைச் சவுக்கினால் அடித்ததைப்போல் என்னை அடிக்கவில்லை. மற்றக்கைதிகள் வேலைசெய்ய மறுத்ததற்காக அதிகாரிகள் அவர்களைச் சவுக்கினால் அடித்தார்கள். —நவசக்தி.

காந்திமகரிஷியும் ஒத்துழையாமையும்.

ஓர் அமெரிக்க மாது எழுதியுள்ள வியாசத்தின் சாரம்.

பிளாஞ்ச வாட்சன் என்னும் ஓர் அமரிக்க மாது "பிரெளிபுக்" பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதுகிறார்:—

சுமார் 2,000 வருடங்களுக்கு முன் இயேசு நாதர் இப்பூமியில் அவதரித்து 'கத்தி, வாள் முதலிய ஆயுதங்களால் சண்டைசெய்வது பிசகென்றும், அப்படி மீறி நடப்பவர்கள் அவ்வாயுதங்களாலே மடிவார்கள்என்றும் ஜனங்களுக்கு உபதேசித்துவந்தார். இதனால்மனிதர் ஒருவருக்கொருவர் சண்டையிடுதல் கெட்ட காரியமென்று தெரிகிறதல்லவா? அக்காலத்தில் இவ்வரிய உபதேசத்தை அறிந்தவர்கள் சிலர். அறிவாளிகளில் அநேகர் இவர் உபதேசத்தை அலக்ஷியஞ் செய்து, இவரைச் சிலுவையில் அடித்துக் கொன்றார்கள்.

வெகு காலத்துக்கு முன் நம் குருநாதர் உபதேசித்த மொழிகளை, இன்று இந்தியாவில் மகாத்மா உபதேசித்து வருகிறார். இயேசுவைப்போல் அவரும் ஜனங்கள் தங்கள் விரோதிகளை நேசிக்கவேண்டுமென்றும், தங்களுக்கு அபகாரஞ்செய்கிறவர்களுக்கு உபகாரஞ்செய்ய வேண்டுமென்றும், போதித்துவருகிறார். இயேசுவைப்போல் தேசசஞ்சாரஞ்செய்து அநேக கோடி ஜனங்களைத் தன்சீடர்களாக்கிவருகிறார்.

நமதுதேசத்தை நாம் எப்படி அரசாளுகிறோமோ அதைப்போலவே இந்தியர்களும் இந்தியாவை ஆள விரும்புகிறார்கள். ஸ்வதந்திரம் அடைய விரும்பும்ஜனங்களை நாமெல்லோருஞ் சகோதரர்களென்றும், சர்வேஸ்வரன் நமக்குப் பிதாவென்றும் உபதேசித்த இயேசுவின் அரிய மொழிகளை மறந்து, தங்கள் அரசாங்கத்தாருடன் கத்தி, துப்பாக்கி முதலிய ஆயுதங்களால் போர்புரிவதும், சத்துருக்களைக் கொல்வதும் வழக்கம். அநேகநூற்றாண்டுகளுக்குமுன் இயேசுக்கிறிஸ்து உபதேசித்த மொழிகளை, இன்று இந்தியர்களுக்குபதேசிப்பவர் காந்திமகரிஷி! இவரும் கத்தி, வாள் முதலிய ஆயுதங்களால் போர் புரிவது பிசகென்றும், அப்படிச் செய்பவர்கள் அவ்வாயுதங்களால் மடிவது திண்ணம் என்றும் போதித்துவருகிறார். சென்ற நூற்றாண்டுவருடகாலமாய் இந்தியாதேசத்தை அரசாண்டுவரும் இங்கிலீஷ் அரசாங்கத்தவர் எவ்வளவோ சாமர்த்தியமான சேனாதிபதியைக் கண்டு பயப்படாமலிருக்க, இக் காந்தியின் பெயரைக்கேட்டவுடன் நடுங்கிப்போகிறார்கள் காரணஞ் சொல்லுகிறேன் கேளுங்கள். காந்தியென்னுங்கரிஷி இந்தியர்களைப்பார்த்து "நீங்கள் இந்த இராஜாங்கத்தாருடனும் இங்கிலீஷ்காருடனும் எவ்விதமான ஜோலியும் வைத்துக் கொள்ளக்கூடாது. ஆனால் அவர்களுக்கு ஒரு விதத்திலும் கெடுதல் செய்யாமல் அவர்களை உங்கள் சகோதரர்போல் நேசியுங்கள்" என்று உபதேசித்திருக்கிறார். இதனால்தான் இங்கிலீஷ் அரசாங்கத்தார் காந்தியைக் கண்டு பயப்படுகிறார்கள். உதாரணமாக 'நீ ஒருவனைக் சேவலமாக நடத்தியும், அவனுக்குக் கெடுதல்கள் செய்தும்கூட, அவன் உன் கடத்தையைக்கண்டு உன்னை வெறுக்காமல் நேசித்துவரும் விஷயத்தில் அவனுக்கு சதாகாலமும் கெடுதல் செய்ய நீ எண்ணுவாயா? எண்ணவேமாட்டாய்.!

'நான் சொல்லுகிறபடி நீங்கள் நடக்கும் விஷயத்தில், உங்களுக்கு சுதந்திரம் கூடியசீக்கிரத்தில் கிடைக்கும்" என்று காந்தி இந்தியர்களுக்குச் சொல்லுகிறார். மிகவும் ஒல்லியாகவும், தேகசக்தி யற்றவருமான இந்தக் கறுப்பு மனிதன் இப்படிப்பேசும்போது ஒருவரும் அவருடன் சேராமலிருக்க முடியாது; அவருடைய அருமையான கண்களைப் பார்த்துவிட்டு அவர் சொல்வது பிசகென்று எண்ணமுடியாது. ஏனெனில் அவருடைய ஆத்ம சக்தி மிகவும் பலமானது: அவரை எவராலும் ஜெயிக்கமுடியாது.

இங்கிலீஷ் அரசாங்கத்தாருக்கு இது தெரியவில்லை. ஆயினும் இயேசு பல ஆண்டுகளுக்கு முன் பேசியதேமாதிரி காந்தியும் வேதவாக்குகளைப் பேசுகிறபடியால் இங்கிலீஷ்காரர்கள் காந்தியைக் கண்டு நடுங்குகிறார்கள்.

இந்தியர்கள் இப்போரைச் சரியானபடி நடத்துவார்களா? காந்தி இப்போரில் ஜயமடைவாரா? சண்டையென்பது கெடுதலென்றும், அன்பு என்பது இவ்வுலகத்திலுள்ள போருட்களில் மிகச் சிரேஷ்டமானதென்றும் ஜனங்கள் கற்றுக்கொள்வார்களா?

நாமெல்லோரும் இந்தியாவையும் காந்தியையும் கவனிப்போமாக: —ஸமரஸ போதினி.

கடிதம்.

சுபோதத் துணுக்கைகள்.

ஐயன்மீர்! அள்ளிற்கொண்மின்.

இல்லறம் பெரிதோ? துறவறம் பெரிதோ? என ஆசங்கை எழுப்பி விதண்டாவாதம் பேசி இடருழக்கற்க; இரண்டும் மோக்ஷ வீட்டுக் கேறுஞ் சோபானங்களே. சௌபரி முனிவர் துறவறத்தைத் தணந்து, இல்லறத்திற்புகுந்து துறக்க மெய்தினர்; சிந்தைகலை திறம்பாத ஞானியராலுஞ் சிரமீது கொள்ளத்தக்க திருவள்ளுவ நாயனார், இல்லறத்திலிருந்து பிறவா முத்தி யெய்தினரன்றோ? சுந்தரமூர்த்தி நாயனார், அகத்தியர், வசிட்டர் முதலிய மகான்கள் இல்லறத்திலிருந்தே பிறவாநிலை பெற்றனர். உத்தமபத்தினியோடு மனைவாழ்க்கையை உசிதமான வழியில் நடத்தும் உரவோருக்கு, ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும் ஞானியரெய்தும் உயர்கதி, கைவல்யமா மென்பது ஒருதலை; "அட்டமத்துச் சனியை வட்டிக்கு வாங்கியது போல" அட்டஸதிரியை வேட்டுத் தொல்லைப்படும் இல்லறத்தினும், துறவறம்விசிட்டமுடையதே. துறவியென வேடம்பூண்டு வாய் ஞானம் பேசிக் குச்சு நுழையுங் கொச்சைமக்களினும், இல்லறத்திருந்து நல்லறம் நடத்தும் ஏகபத்தினி விரதம் பூண்ட குடும்ப ஞானிகளே அதிக மேன்மை யுடையர்.

தனதனேகீர்த்த தனவந்தரும் திருடர் அக்கினி ஒக்கலாதியோரால், யாண்டுத் தீங்கு நிகழுமோவென நெட்டுயிர்ப்புற்றுத் துயிலின்றி வருந்துவர்; பாரைப்புரக்குஞ் சீருளவேந்தரும் "பாற்றரசர் வெருண்டு வந்து ஏற்றெதிர் மலைவாரோர" என வைகலுஞ் சிந்தை யலமந்து வாடுவர்; இம்மைச்சுகமே உண்மைச் சுகமென வெண்ணி ஒருவருக்குந் தலைவணங்காது தருக்குற்று வாழ்வார்களும், எப்போது யமபாசம் கழுத்தைச் சுற்றுமோ வென ஏக்குற்று உள்ளம் ஊசலாடுவர்; இம்மை யின்பங்களை உண்டுமிழ்ந்த உச்சிட்டமென அகற்றிய சிவதொண்டர்களோ, சகித்தற்கரிய இன்னலெய்தினும் ஒன்றுக்குமஞ்சாது, "அவனன்றிஓரணுவுமசையாது" என்னும் ஆப்த வாக்கியத்தைக் கடைப்பிடித்துச் சந்தமுஞ் சிவதியானத்தோடு மிருந்த சந்துஷ்டியாயிருப்பர்; அச்சாதுக்கள் நடக்கினும், இருக்கினும், ஸெளகிகஇன்பங்களை ஐம்புலன்களும் ஆர அனுபவிக்கினும், துயிலினும், விழிக்கினும், அரசர் வெருண்டு கராரக்கிருகத்திலிடுகினும், பகைவர் நிந்திக்கினும்,

பக்தர்கள் துதிக்கினும் ஒன்றினும் விருப்பு வெறுப்பின்றிச் சித்தத்தைச் சிவன்பால் நிறுவி, "தாமரையிலையில் தண்ணீர் போல்" யாதினுந் தாக்கற்று வைகுவர்.

ஒருவன் முற்சென்மத்திற் செய்த தானதருமங்களின் நல்வினைப்பயனால். இம்மையிலே அட்ட ஐஸ்வரியங்களையும் பெற்று மாநிரம் மதிக்கவாழ்கின்றான்; அத்தகைய தனவந்தரேமுப்பத்திரண்டு அறங்களையும் ஆற்றும் ஆற்றலுடையர். யானையானது தானுண்ணுங் கவளஉணவிலே சிறிது நிலத்திலே சிந்ினால், அதனால் எட்டுணையும் வருத்த முறாது அங்ஙனஞ் சிந்திய அற்ப உணவைக்கொண்டு. கோடிக்கு மேற்பட்ட எறும்புகள் தங்கினைகளோடு அருந்திச் குலாவலத்தோடு சீவிக்கும். முற்சென்மத்திற் புண்ணியஞ் செய்யாதாரே, இந்தச் சென்மத்தில் நீங்காத நல்குர வெய்தி நலிவர். கழிவியைப் பருவகாலத்தில் உழாது கொத்திப் பசளியிட்டுப் பண்படுத்தி விதையிடாதவர், கோரியிலே வேண்டிய நெல்லைக் கட்டிவைத்து வருடம் முழுதுங் கவலையின்றி யிருந்து சாப்பிட முடியுமா? வெறும் பானையை அடுப்பிலேற்றி எரித்தால் பொங்குமா? பல்லக்கில் இவர்ந்து செல்பவனும், பல்லக்கைத் தாங்கிச் செல்பவனுமாகிய இருவரும் மனிதராயிருந்தும், ஒருவனை ஒருவன் தூக்கிச் செல்வதற்கு ஏதுவென்னை? கடவுள் பக்ஷபாதமுள்ளவரல்லவே! தன் பிள்ளைகள் எல்லாரையுஞ் சம அன்போடு பாதுகாத்துவரும் பிதா, ஒரு பிள்ளையை மற்றப் பிள்ளை காவும்படி கட்டளையிடுவாரா? அங்ஙனம் அவர் நீதிக்கு விரோதமான செய்கையைச் செய்விப்பாராயின், பக்ஷபாதமுள்ள பிதாவென்று, உலகோர் விகழப்படுவரன்றோ? அன்புள்ள சகோதர சகோதரிகளே! இந்த நியாயத்தை ஒவ்வொருவருஞ் சிந்தித்து, ஒழுகக்கடவீர்கள். இல்லந் தீக்கிரையாகும் போது, சிரமப்பட்டு வெளியில் எடுத்தெறிந்த பொருளே மிச்சப்படும். (ஒரும்).

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

விளம்பரம்.

பென்சில்வேனியா
(U. S. A.)
பெற்ரோலியம்
புறடெக்ஸ்.

"சிங்கமார்க்"போட்ட திறம் மண்ணெண்ணெய். இது சுத்ததண்ணீர் போன்றது; புகைக்கமாட்டாது; திரியைக் கருக்கமாட்டாது; கண்ணுக்கு மிகவும் நல்லாய் இருக்கும்; துர்நாற்றமற்றது; நல்ல ஒளியைக் கொடுக்கும்- ஷை எண்ணெய் விற்பதற்கு யாழ்ப்பாணத்திற் பிரதான சந்தையுள்ள எல்லா இடங்கட்கும் ஏசண்டுமார் தேவை.

K. V. மார்க்கண்டன் & பிறதர்,
இலங்கை ஏசண்டுகள்.

இவைகளைப்பற்றிய விபரம் எம்மிடம் அறிந்து கொள்ளலாம்.

A. S. கந்தையா,
யாழ்ப்பாண ஏசண்டு,
வட்டுக்கோட்டை.
(Mis. 403).

விளம்பரம்.

இதன்கீழ்க் கையொப்பமிடும் வண்ணார்பண்ணை-மேற்கு சிவசுப்பிரமணியக்குருக்கள் சிவசங்கரஐயராகிய நான் இத்தால் வெளியாக்கப்படுத்துகிறதாவது,

என்பேருக்கு சொடிகாமம் சிதம்பரப்பிள்ளை ஆறுமுகம் 1913ஆ ஐப்பசிமீ 24உ ரூ. 500-க்கு எழுதித்தந்த வாக்குமூலப் பத்திரத்தை இழந்துவிட்டேன் என்றும் இனிமேல் அவ்வாக்குமூலப்பத்திரம் பொய்யானதாக விருக்கும் என்றும் வெளிப்படுத்துகிறேன்,

சி. சிவசங்கரஐயர்,
27-உ அக்டோபர்மீ 1923
(Mis. 406.)

அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டனைச் சட்டத்தின்படி லீசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் திருகோணமலை 6-ம் நம்பர் காளக்கடை வீதி மு. தாமோதரம்பிள்ளை & இராசலிங்கம் இடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷைசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

நம். மீ	வ	ரூ.	சத.	நகை விபரம்.
F 1922ஆ				
1343	1	6	8	வெ. அடுக்குக்காப்பு சோ. 1. சு. இ.
1443	1	12	6	தங்க காப்பு 1
1459	1	13	55 04	சிறுபட்டணங்காப்பு சோடி 1
1539	1	20	18	பூசாந்திரமுடன் மணி 4
1624	1	27	7 04	கற்கறணைப்பூ சோடி 1
1663	1	30	25 04	சிறு பாதசரம் சோடி 1
1812	2	13	10	வெ. ஒட்டியாணம் 1
1882	2	19	25 04	பின்1,சிறு 4பட்டு மணிக் கோர்வை 1
1942	2	25	18 54	வெ. கொலுசு சோ. 1
1959	2	28	27 04	வெ.பாதசரம் சோ1.சு.இ
1960	2	28	26 54	அரைஞாண்கொடி 1 பழைய சிறு பொன் தாலிக்கொடி 1
2020	3	6	6	இமிற்.சிகப்புகல்மோதி 1
2061	3	11	14	வெ. அடுக்குக் காப்பு சோடி 1, சு. இ.
2146	3	18	75	பத. பிறை பொட்டுடன் திருக்கொன்றைமணிக் கோவை 1
2176	3	20	90 04	கல் விழு. பத. எஸ் அட்டியல் 1
2196	3	22	56	பவுண் 4
2244	3	27	18	வெ. பழைய பாதசரம் சோடி 1
2368	4	5	20	இமிற். தோடு சோடி 1
2381	4	6	21	தாலித்தட்டு 8 குடம் 1 பின் 1
2386	4	7	6	பொட்டு பதக்கம் 2 சிறு பொன் விலங்கு 1
2389	4	8	23 04	நீலக்கல் மோதிரம் 1 மோதிரம் 1
2419	4	11	10	சு. இ. சிறு இமிற். கடுக்கன் சோடி 1
2436	4	12	6	பழைய வெ. கடகம் சோடி 1 சு. இ.
2532	4	22	20	பழைய கற்றோடு சோ. 1 பழு. பதக்கம் 1
2571	4	24	13	முறி. பூசாந்திரம் 1
2580	4	27	20	ஒ. கு. இ. பின் பூசாந்திரமுடன் மணி 9
2581	4	27	15	பூசாந்திரமுடன் மணி 10
2597	4	29	25	கல் முத். விழு பதக்கத்துடன் சவுக்கமணிக் கோவை 1 சிறுகற் சொருகுதோடு 1 சு. இ. கல் முருகு சோ1
2626	5	1	75	எஸ் அட்டியல் 1
2667	5	7	15	தெட்சாவந்தனம் 1
2697	5	12	7	மணி 4
2736	5	16	210	சம்புநாதவளையல் 4
2770	5	19	10	பழைய தண்டை சோ. 1
2804	5	22	7	கொப்புச் சிமிக்கி சோ. 1
2823	5	23	20	குப்பி சோடி 2 பூசாந்திரக்கடுக்கன் சோடி 1
2883	5	27	15	சிறுபடம் 1 படக்கூர் 1 வெ. குழல்க்காப்பு சோ.1 சு. இ. அடுக்குக் காப்பு 1
2895	5	23	12	பூசாந்திரம் 1
2907	5	29	18	பழு. சவுக்கமணிக் கோர்வை 1ல் மணி 21
2917	5	30	47	பத திருக்கொன்றைமணி கோவை 1
2990	6	5	300	½பவுண் 70 கோர்த்த மாலை 1
3049	6	8	50	பூரானட்டியல் 1
3118	6	13	20 04	கல் மயிர்மாட்டி சோடி1 கல் முருகு சோடி 1
3127	6	14	26	சவுக்கமணிக் கோவை 1 குப்பி சோடி 1
3128	6	14	55 04	கொன்றைமாலை 1
3185	6	20	14	வெ. பாதசரம் சோடி 1
3193	6	21	20	தங்க மோதிரம் 1
3204	6	22	7 50	கற்காறுப்பூ சோடி 1 வளையல் 7 பழுது.
3211	6	22	13	தோடு சோடி 1
3244	6	24	10	இதட் பூ 1
3249	6	25	30 30	கு. வை. பவுண் 1 கு. வை. ½பவுண் 2 இலை மாலைத் தண்டு 1
3250	6	25	15	சுடர் திருகு பூ 1
3251	6	25	100	கொன்றை மாலை 1 ரூக் கடி 1
3265	6	26	11	சிறு பொன்காப்பு சோ.1

விற்பனவு:—ருதிரோற்காரி வருடம் கார்த்திகை மாதம் 5-ந் திகதிக்குச் சரியான 1923-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி தெய்வாய்க்கிழமை 9 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகீங்கலாக மிருதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்,
(Mis. 405). வெந்தீஸ்மேஸ்தர்.

ஓர் பிராமணோத்தமர் தேவை.

சிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் கோலாலம்பூர் 'ஸ்கொற்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்றாயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமணகுடும்பத்தைச்சேர்ந்தவராயு மிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப(துவஜாரோகண)தினக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமிகோயில்
(Q. 45) காரியதரிசி.

தேக்கமரம்.

திறமான பர்மாதேக தேக்கமரத் தீராந்திகள். நீழம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
(H. 16.) தொண்டமானறு.

"பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இனபத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

மூலத்திற்கு
குருநாகபஸ்பம்

ஆப்றேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குந்தல், மூலமூளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

இருமலுக்கு
குருதாளக பஸ்பம்.

காசம், சுவாசம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவுநாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மேடல்கள் பெற்ற
C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.

[ESTABLISHED 1909].
MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (SouthArcotDistrict).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனாமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றாவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லாதின்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய லேன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுவப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேகுடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்சிலவு தினும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றாவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனாமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றாவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை தென்னாற்காடு ஜில்லா.
(Y. 19).

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரகசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளம்புக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.